## (7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

[1978 மார்ச் 4

298. தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரிய தொழில் நுட்பம் சாராத சார்நிலைப் பணி விதிகளுக்கான சிறப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டு வசதித் துறையின் 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதியிடப் பெற்ற 306 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

90. 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதியன்றுள்ளவாறு திரு. ரெ. வீ. சவுந்தரராஜன், சட்டமன்றப் பேரவை உறுப்பினரது சொத்திருப்புக்கள் பற்றிய விவரக் கணக்கு பேரவை முன் வைக்கப்பெற்றது.

**91. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவிற்கான இணைப்பு.

#### இணைப்பு

[600-ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 387—க்கான விடையைக் காண்க].

(அ) பாதகமான கருத்துக்களை வெளியிட்டதற்காகவும், பத்திரிகைத் தணிக்கை ஒழுங்கு முறைகளை மீறியதற்காகவும், மாநில அரசு தாமாகவே நடவடிக்கை எடுத்ததன் பேரிலும் மாநிலத் தணிக்கை அதிகாரி அனுப்பியதன் பேரிலும், கீழ்க் கண்ட செய்தித் தாள்கள், பத்திரிகைகள் ஆகியவற்றின் பிரதிகள் இந்திய எல்லைப் பாதுகாப்பு உள்நாட்டுப் பாதுகாப்பு விதிகளின் 47, 48-வது விதிகளைச் சேர்ந்த விதித்துறையின் கீழ் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்று 1976ல் ஆணையிட்டது.

நாளிதழ்கள் —

| | | |
|---|---|---|
| (1) | இனமுரசு | (7—5—1976, 8—5—1976) |
| (2) | நவமணி | (21-5-76, 22-5-76) |
| (3) | செங்கொடி | (20-7-75, 21-7-75) |
| (4) | விடுதலை | (29-12-75 முதல் 1-1-76 வரை) |
| (5) | விடிவெள்ளி | (11-12-76 முதல் 1 -12-76 வரை)—இரண்டு ஆணைகள். |

** 2—3—1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றுள்ளன.

1978 மார்ச் 4]

மாத இதழ்கள்—

(1) தென்மொழி .. (1976ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி).

(2) முஸ்லீம் முரசு .. (1976 ஆம் ஆண்டு செப்டம்பர்).

(3) நல்ல தமிழோசை .. (1–2–1976, 1–7–1976).

பிற சிற்றேடுகள்—

(1) வணக்கமும் வாழ்த்தும்.

(2) தேச பக்தர்களுக்கு.

(3) வாளும் கேடயமும்.

(4) எங்கள் மாதவன்.

(5) சர்க்காரியா கமிஷன் விசாரணையில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்காக திரு. மு. கருணாநிதியும் பிற அமைச்சர்களும் விடுத்த அறிக்கைகள்—ஆங்கிலம்.

மாநிலத் தணிக்கை அதிகாரி அறிக்கை அனுப்பியதன்பேரில் விடுதலை, விடிவெள்ளி, செங்கொடி, முஸ்லிம் முரசு, வாளும் கேடயமும், எங்கள் மாதவன் ஆகிய பத்திரிகைகள் மீது மாநில அரசு நடவடிக்கை எடுத்தது. மொத்தத்தில் 1976-ம் ஆண்டில் 14 பறிமுதல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவற்றில் மறு ஆய்வுக்குப் பின்னர் 13 ஆணைகள் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளன. முஸ்லிம் முரசு மீது பிறப்பிக்கப்பட்ட ஆணை மட்டும் ரத்து செய்யப்படவில்லை. ஏனெனில், இந்திய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கும் விவரங்கள் கொண்ட தேசப் படத்தை அது வெளியிட்டது.

(ஆ) அவசர நிலையின் போது பாதகமான கருத்துக்களை வெளியிட்டதற்காகவும், பத்திரிகைத் தணிக்கை ஒழுங்கு முறைகளை மீறியதற்காகவும் இந்தப் பறிமுதல் ஆணைகள் அனைத்தும் பிறப்பிக்க வேண்டியிருந்தன. மேற்சொன்னவை தவிர, இந்தித் திணிப்பை எதிர்த்துப் பாதகமான அறிக்கையை வெளியிட்டதற்காக 1976ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15ஆம் நாளிட்ட 'தென்னவன்' என்ற இரு வார இதழின் பிரதிகளை, இந்திய எல்லைப் பாதுகாப்பு உள்நாட்டுப் பாதுகாப்பு விதிகளின் 46 (5) விதியின் கீழும், கி. பு. கோ. 102-ஆவது பிரிவின் கீழும் மேற்கு தஞ்சாவூர் காவல் துறையினர் பறிமுதல் செய்தனர். சென்னையில் உள்ள இந்திய அரசின் பத்திரிகைத் தகவல் கழக இயக்குநர் (Director, Press Information Bereau) இது குறித்து நடவடிக்கை எடுத்ததால், பறிமுதல் செய்யப்பட்ட பிரதிகளை என்ன செய்ய வேண்டும் என்பதற்கான கட்டளைகளை மேற்படி இயக்குநரிடமிருந்து பெறுமாறு, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் தேதி அன்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS